**திருத்துறைப்பூண்டி நகராட்சி**

**இயல்பு கூட்ட நடவடிக்கைகள்**

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 31.12.2020 வியாழக் கிழமை தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட இயல்பு கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை திரு.என்.சந்திரசேகரன்,பி.இ.,**
**தனி அலுவலர்,**
**திருத்துறைப்பூண்டி நகராட்சி.**

| பொருள் எண் | பொருள்கள் விபரம் | நகர்மன்றத் தீர்மானம் | |
|---|---|---|---|
| | | தீர்மானம் எண் | விபரம் |
| **01** | நகராட்சி ஆணையர் அவர்களின் டிசம்பர்'2020 மாதத்திற்கான நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** பதிவு செய்யலாம். | **240** | **பதிவு செய்யப்பட்டது** |
| **02** | இந்நகராட்சியின் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நகராட்சி என்று மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், மேலும் இந்நகரின் தினசரி உற்பத்தியாகும் கழிவறை கழிவுகளை மேலாண்மை விதிகளின்படி முறையே தரம் பிரித்து கையாளப்பட்டு வருகின்றது. மேலும் இரண்டாம் நிலை சேகரம் செய்வது முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது. எனவே, திருத்துறைப்பூண்டி நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage free city) ஒரு நட்சத்திர அங்கீகாரம் (Self Declarating) சுய உறுதிமொழி சான்றிதழுக்கு திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக செய்தி மக்கள் தொடர்பு துறை அலுவலர் அவர்களுக்கு 28.10.2020-ல் கடிதம் அனுப்பப்பட்டு தினத்தந்தி நாளிதழில் தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழியில் 31.10.2020 மற்றும் 06.11.2020 | **241** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கலாம்** |

| | | | |
|---|---|---|---|
| | வரப்பட்டுள்ளது. இதற்கான தொகை ரூ.21168/-ஐ (ரூபாய் இருபத்தி ஒன்றாயிரத்து நூற்று அறுபத்தி எட்டு மட்டும்) தினத்தந்தி நிறுவனத்திற்கு வழங்கிட மன்றப் பொருள் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br><br>1. அனுமதிக்கலாம்.<br><br>2. பொதுசுகாதாரப் பிரிவிற்கு 2020-2021ம் நிதியாண்டில் உத்தேச செலவினம் ரூ.38.00 இலட்சம் தீர்மானம் எண் 181 நாள் 30.06.2020ல் அ்னுமதியினை ஏற்று செலவினம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண் 127/2020/எச்1)** | | |
| **03** | ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை புரட்சித் தலைவி அம்மா வரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டு திட்டம் – ஊரகம் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் வறுமை கோட்டிற்கு கீழ்வாழும் குடும்பங்களின் கூடுதல் விவரங்களை கணக்கெடுப்பதற்குரிய வழிகாட்டு நெறிமுறைகள், வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண் 170 நாள் 27.10.2020 மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>மேலும் மேற்படி அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட பகுதியிலுள்ள வறுமைக்கோட்டிற்கு கீழ்வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை 3248க்கான கூடுதல் விவரங்களை சேகரிக்க ஒரு குடும்பம் ஒன்றுக்கு ரூ.15/- வீதம் (தகவல் சேகரிப்பு பணிக்கு ரூ.5/-ம், படிவம் அச்சிடுதல் பணிக்கு ரூ.5/-ம் மற்றும் தகவல்களை பதிவேற்றம் செய்திடும் பணிக்கு ரூ.5/- ) ஆகக் கூடுதல் ரூ.48720/- ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது. எனவே, மேற்படி தொகை ஒதுக்கீடு செய்தவுடன் ஈடு செய்து கொள்ளும் வகையில், கணக்கெடுப்பு பணி உடன் முடிக்க வேண்டியுள்ளதால் மேற்கண்ட செலவுத் தொகையினை பொது நிதியிலிருந்து செலவிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **242** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கலாம்** |

**அலுவலக குறிப்பு:**

1. அரசாணையினை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யும் வரையில் பொது நிதியிலிருந்து கணக்கெடுப்பு பணி செலவினத்தை செய்திட மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண் 246/2018/இ2)**

| 04 | இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவின் நலன் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் எதிர்வரும் நிவர் புயலினை எதிர்கொள்ள தளவாடப் பொருட்கள் மற்றும் மழை தடுப்பு சட்டைகள் கீழ்க்கண்டுள்ள அனுமதி பெற்ற நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளிகள் விரப்பட்டுள்ளது. | 243 | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கலாம்** |
|---|---|---|---|

| வ. எண் | தளவாடப் பொருட்கள் | பரிஷித் டிரேடர்ஸ், 3/10.கீழ தேவதானம், திருச்சி. | கமலா டிரேடர்ஸ், 2.கீழ தேவதானம், திருச்சி. | ஆர்.எஸ்.ஏடிரேடர்ஸ் 76/12.சுண்ணாம்பு காரத் தெரு, திருச்சி.. |
|---|---|---|---|---|
| | | **ஒன்றின் விலை +GST 18%** | | |
| | | ரூ. | ரூ. | ரூ. |
| 1 | மண் வெட்டி | 400 | 450 | 470 |
| 2 | அலுமினிய கூடை | 425 | 455 | 480 |
| 3 | தென்ன வாருகோல் | 42 | 47 | 50 |
| 4 | அறிவாள் | 350 | 380 | 400 |
| 5 | இரும்பு முள் கொக்கி | 150 | 150 | 170 |
| 6 | அலக்கு அரிவாள் | 860 | 860 | 200 |
| 7 | கடப்பாறை | 350 | 895 | 895 |
| 8 | பீர்காய் | 350 | 380 | 390 |
| 9 | மில்லர் | 350 | 430 | 460 |
| 10 | ரைன்கோட் | 950 | 1050 | 1080 |
| 11 | ரைன்கோட் | 710 | 740 | 770 |

| | | | |
|---|---|---|---|
| | **அலுவலக குறிப்பு:**<br><br>**1.** மேற்படி வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான தொகைக்கு விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண் 1-ல் கண்டுள்ள பரிஷித் டடிரேடர்ஸ், திருச்சி நிறுவனம் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**2.** அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு 15-ல் பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br><br>**3.** மேற்படி செலவினை பேரிடர் மேலாண்மை நிதி வரும் பட்சத்தில் அதில் ஈடு செய்து கொள்ளலாம்.<br>**<u>(ந.க.எண் 2290/2020/எச்1)</u>** | | |
| **05** | இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவு தூய்மை பணியாளர்கள் மற்றும் தகுதியுடைய பணியாளள்களுக்கு சீறுடைகளுக்கான தையற் கூலி ரூ.25200/- மற்றும் சீறுடை தொகை ரூ.46053/- கூடுதல் ரூ.71253/- (ரூபாய் எழுத்தி ஓராயிரத்தி இருநூற்று ஐம்பத்தி மூன்று மட்டும்) வழங்கிட மன்றப் பொருள் அனுமதிக்கு.<br><br>**அலுவலக குறிப்பு:**<br><br>**1.** அனுமதிக்கலாம்.<br>**2.** பொதுசுகாதாரப் பணியாளர் மற்றும் தகுதியுடைய பணியாளர்கள் நலன் கருதி மன்ற தீர்மானம் எண் 181 நாள் 30.06.2020ல் ரூ.3.00இலட்சம் அனுமதி பெறப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>(ந.க.எண் 2193/2020/எச்1)</u>** | **244** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கலாம்** |

| | | | |
|---|---|---|---|
| **06** | தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தில் நகராட்சிகளில் பணிபுரியும் இளநிலை உதவியாளர்களுக்கான விரிவாக்கப் பயிற்சி 28.12.2020 முதல் 29.01.2021 வரை நடைபெற உள்ளதில் இந்நகராட்சி இளநிலை உதவியாளர் திரு.ஜெவினோத்குமார் என்பவரை மேற்கண்டுள்ள பயிற்சியில் கலந்துகொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், பயிற்சியில் பங்கேற்கும் அன்னாருக்கு தங்கும் இடம், உணவு வசதிகள் பயிற்சி நிறுவனத்தினாலேயே வழங்கப்படுவதால் அதற்கு ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் மேற்கண்டுள்ள 20 நாட்களுக்கு ரூ.20,000/- தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் என்ற பெயரில் கோயம்புத்தூரில் செலுத்தத்தக்க கேட்பு வரைவோலையாக அனுப்ப கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>எனவே, பயிற்சியில் கலந்துகொள்ளும் அன்னார் தங்கும் இடத்திற்கும், உணவிற்கும் ரூ.20000/- வங்கி வரைவோலையாக எடுக்கப்பட்டு தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br><br>**1.** அனுமதி வழங்கலாம்.<br><br>**2.** மேற்கண்டுள்ள தொகை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலுத்தலாம்.<br><br>**<u>(ந.க.எண் 555/2020/சி1)</u>** | **245** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கலாம்** |

| | | | |
|---|---|---|---|
| **07** | இந்நகராட்சியின் கொரோனா விழிப்புணர்வு நோய் பரவுதல், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் மக்கும் மற்றும் மக்காத குப்பை பிரித்து வழங்குதல், டெங்கு மற்றும் மலேரியா போன்ற கொசுவினால் ஏற்படும் நோய்கள் தொடர்பாக விழிப்புணர்வு நாடகம் பிளாஸ்டிக் ஒழிப்பு போன்ற விழிப்புணர்வு நாடகம், (1) புதிய பேருந்து நிலையம் (2) பழைய பேருந்து நிலையம் போன்ற இடங்களில் விழிப்புணர்வு நாடகம் அன்னை கம்சலை தொண்டு நிறுவனம் கலைக்குழு, தஞ்சாவூர் அவர்கள் மூலம் நடத்தப்பட்டுளள்து. இதற்கான தொகை ரூ.18000/- (ரூபாய் பதினெட்டாயிரம் மட்டும்) வழங்கிட மன்றப் பொருள் ஒப்புதலுக்கு வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br><br>**1.** அனுமதிக்கலாம்.<br><br>**2.** பொதுமக்கள் நலன் கருதி வழிப்புணர்வு நாடகள் நடத்தப்பட்டுள்ளதுனை ஏற்று தொகை ரூ.18000/- வழங்கலாம்.<br><br>**3.** IEC தொடர்பான நிதி ஒதுக்கீடு வரும் பட்சத்தில் ஈடு செய்து கொள்ளவும், தற்சமயம் பொதுநிதியிலிருந்து அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண் 740/2020/)எச்1)** | **246** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கலாம்** |
| **08** | அரசாணை (நிலை) எண் 181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி-4) துறை நாள் 19.09.2008-ன்படியும், குத்தகை விதிமுறைகளின்படியும் 01.04.2021 முதல் 31.03.2024 வரை மூன்றாண்டு காலங்களுக்கு திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான பல்வகைப்பட்ட குத்தகை இனங்களான (1) மீன் நாளங்காடி மற்றும் கசாப் கடைகளில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் (2) ஆடு அறுக்கும் தொட்டி கட்டணம் வசூல் செய்யும் உரிமம் (3) தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 270-ன்கீழ் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் (4) புதிய பேருந்து | **247** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கலாம்** |

| | | | |
|---|---|---|---|
| | நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கும், இரவில் தங்கும் பேருந்துகளுக்கும் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் (5) புதிய பேருந்து நிலையத்தில் தொலைக் காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம் ஆகியவற்றை பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளிக் கோரிட தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், இந்நடவடிக்கைகளுக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகையினை வருவாய் பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br><br>**1.** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**2.** பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி பற்றிய அறிவிப்பினை தேவையான எண்ணிக்கை அச்சு செய்து கொள்ளவும் அதனை முன்னனி தினசரி நாளிதழில் விளம்பரம் செய்திடவும் மற்றும் இது தொடர்பான செலவினங்களை வருவாய் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br><br>**(ந.க.எண் 2571/2020/)அ2)** | | |

ஓம்/ஆணையர்(கூ.பொ.) (ம)
தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

/உண்மை நகல்/